**ஆகஸ்ட் - 31**

**"நாங்கள் ஆராதிக்கிற (சேவிக்கிற) எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்." - தானி 3 : 17, 18.**

அந்த எபிரேயர் நேபுகாத்நேச்சாருக்குக் கொடுத்த உத்தரவில், "நாங்கள் ஆராதிக்கிற (சேவிக்கிற) எங்கள் தேவன்" என்கிற வார்த்தைகள் கவனிக்கத்தகுந்தவை. அவர்கள் தேவனை அங்கீகரித்து அவரைப் பணிந்துகொண்டது மட்டுமல்லாமல், கூடுதலாக அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களுக்கு இணங்க அவருக்கு ஊழியம் செய்தார்கள். பிரியமுள்ள சகோதரரே, அந்த மூன்று எபிரேயர் செய்தது போல, நமது தேவனும் கர்த்தருமானவரை, மாத்திரம் நாம் பணிந்துகொண்டு அவருக்கே ஊழியம் செய்வோம் என்றும், மதப்பிரிவுகளில் ஏதாவதொன்றையோ, ஆசாபாசங்களும், கைமாறுகளும் கொண்ட ஐசுவரியாதையோ, கீர்த்தியையோ, சிநேகிதரையோ, தன்னையோ பணிந்துகொண்டு அவர்களுக்கு ஊழியம் செய்யவோ மாட்டோம் என்றும் உறுதி கொள்ளுவோமாக. தேவன் "தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள விரும்புகிறார்." என்பதே நம்முடைய கர்த்தரும் தலையுமானவருடைய உறுதிமொழியாகிறது. **- Z ’99, 172 (R 2494)**

தேவனுடைய ஊழியக்காரர் தவறு செய்யவோ அல்லது நன்மை செய்வதிலிருந்து தடுக்கப்படவோ இழுத்துச் செல்லப்படுகிறோம் என்கிற பயம் எப்பொழுதாவது ஏற்பட்டால், நாம் என்ன செய்ய வேண்டும்? நன்மையை விடாமற் செய்வதுதான் தங்களுடைய பங்கு என்பதையும், விடுதலையடைவதை அல்லது விடுதலையடையாமற் போவதையோ கர்த்தரின் சித்தத்திற்கும் வல்லமைக்கும் விட்டுவிட வேண்டுமென்பதையும் அவர்கள் ஞாபகத்தில் வைப்பார்களாக. அவர் சித்தம் கொண்டால், அவர்களை விடுவிக்க அவர் வல்லவராயிருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பூரண உறுதியைக் கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்களாக. கடைசிவரை மரணத்துக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட மனுஷீகத்தை அவர் விடுவிக்காவிட்டாலும் கூட, அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தார்களானால், அவர்களுடைய புது இருதயமும், மனதும், சித்தமும் ஒரு தீங்கும் அடையாமல், அடையாளத்தில் அந்த மூன்று எபிரேய வாலிபர்களுக்கும் நடந்ததுபோல, பூமியோடு தங்களைக் கட்டியிருக்கும் கட்டுகளிலிருந்து எரிகிற அக்கினிச் சூளையினால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். **- P ’33, 111.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 32:11; 50:20; எண் 20:16; உபா 23:4,5; 2இராஜா 19:16,19; 1நாளா 5:20; 2நாளா 14:11; எஸ்த 7:10; சங் 31:1-4,9,14-17; 50:15; 105:14,15; 146:8,9; நீதி 16:7,9; ரோம 8:28; பிலி 1:12.**

**கோபுர வாசிப்பு : Z ’99, 168 (R 2494)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் உபத்திரவத்தில் நான் கர்த்தரை நம்பினேனா? எப்படி? ஏன்? பலன்கள் எவை?**